ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 23.06.2017

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.4 - 2017

தற்பொழுது நிலவுகின்ற மற்றும் தோற்றம் பெறும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் பேரண்ட பொருளாதாரச் சூழல்களைப் பரிசீலனையில் கொண்ட நாணயச் சபை 2017 யூன் 22ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருந்ததுடன் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டத்தில் பேணுவதெனவும் தீர்மானித்தது.

நாணயச் சபையின் தீர்மானமானது, நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பேணுதல் அதன் மூலம் நீடித்த வளர்ச்சி உத்வேகத்திற்கு வசதிப்படுத்தல் ஆகிய குறிக்கோள்களுடன் இசைந்து செல்வதாகக் காணப்பட்டது. நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்த நியாயப்பாடு கீழே வழங்கப்படுகின்றது.

இலங்கை தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, 2017இன் முதற் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 3.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்திருக்கிறது. முதற்காலாண்டின் வளர்ச்சி குறைவடைந்து காணப்பட்டமைக்கு குறிப்பாக, வேளாண்மையுடன் தொடர்பான நடவடிக்கைகளின் மீது சாதகமற்ற வானிலை நிலைமைகளின் தாக்கம் காணப்பட்டமையே காரணமாகும். கைத்தொழிலுடன் தொடர்பான நடவடிக்கைகளின் செயலாற்றத்திற்கு கட்டுமானத் துறையில் காணப்பட்ட தொடர்ச்சியான பெருமளவு தூண்டுதல் காரணமாக அமைந்த வேளையில், பணிகள் தொடர்பான நடவடிக்கைகள் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. பொருளாதாரம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2017இன் முதற் காலாண்டில் காணப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கினைத் தொடர்ந்து, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு 2013 = 100), தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013 = 100), ஆகிய இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம், எதிர்பார்க்கப்பட்டவாறு ஏப்பிறல் மற்றும் மே மாதங்களில்

மிதமடைந்தது. மையப் பணவீக்கமும் இதே போக்கினை எடுத்துக்காட்டியது. வரி அமைப்பிற்குச் செய்யப்பட்ட திருத்தங்களினதும் வானிலையுடன் தொடர்பான வழங்கல் தடைகளினதும் தாக்கம் எதிர்வரும் காலத்தில் படிப்படியாக மறைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுவதனால் பணவீக்கமானது 2017இன் இறுதியளவில் நடு ஒற்றை இலக்க மட்டத்திற்கு மிதமடையுமெனவும் அதன் பின்னர் உறுதியானதொரு நிலையில் காணப்படுமெனவும் எறிவு செய்யப்பட்டிருக்கிறது.

நாணய விரிவாக்கம் 2017 ஏப்பிறல் இறுதியளவில் உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்து காணப்பட்டமைக்கு வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டிற்கும் வழங்கப்பட்ட உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கமே தூண்டுதலாக அமைந்தது. தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி தொடர்ந்தும் படிப்படியாக குறைவடைந்தது. தற்பொழுது சந்தையில் காணப்படும் உயர்ந்த பெயரளவு மற்றும் உண்மைக் கடன்வழங்கல் வீதங்களைக் கவனத்தில் கொள்கையில் தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியில் மேலும் வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட கொடுகடனில் அண்மையில் ஏற்பட்ட விரிவாக்கம் ஒட்டுமொத்த உள்நாட்டுக் கொடுகடனின் நடத்தைக்கு இடர்நேர்வினைத் தோற்றுவித்து, அரசிற்குச் சொந்தமான முக்கிய வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் செயலாற்றம் தொடர்பான கரிசனைகளைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தினைப் பிரதிபலித்தது. அதேவேளை, 2017 ஏப்பிறல் மாதத்தில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட தேறிய கொடுகடனில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிச் செயன்முறையும் வெளிநாட்டுக் கடன்பாடுகளின் பேரிலான அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்களும் அரச பிணையங்கள் சந்தையில் வட்டி வீதங்களின் மீதான அழுத்தத்தினைக் கணிசமானளவிற்குக் குறைவடையச் செய்திருப்பதைக் காணமுடிகின்றது.

2017 மாச்சிலும் ஏப்பிறலிலும் மேம்பட்ட ஏற்றுமதிச் செயலாற்றம் காணப்பட்ட போதும், இறக்குமதிச் செலவினத்தில் காணப்பட்ட வலுவான அதிகரிப்பு ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையில் விரிவொன்றினைத் தோற்றுவித்தது. சுற்றுலாவுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வளர்ச்சியடைந்ததுடன் 2017 மேயில் சுற்றுலா வருகைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சி தற்காலிகமானதொன்றாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் குறைவினைப் பதிவுசெய்ததுடன் மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் பதட்டங்களில் மேலும் ஏதேனும் அதிகரிப்புக்கள் ஏற்படுமாயின் எதிர்வரும் காலத்தில் அத்தகைய உட்பாய்ச்சல்கள் மோசமாகப் பாதிக்கப்படக்கூடும். 2017 மாச்சிலிருந்து அரச பிணையங்கள் சந்தையில் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் அவதானிக்கப்பட்ட வேளையில் கொழும்புப் பங்குச் சந்தைக்கான உட்பாய்ச்சல்களும் சாதகமான போக்கொன்றினைக் காட்டின. பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக மத்திய வங்கி 2017 மாச்சு தொடக்கம் உள்நாட்டுச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினைத் தொடர்ந்தும் ஈர்த்துக் கொண்டது. இவ்வபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் காணப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெற்றிகரமான வழங்கல் அதேபோன்று அரசாங்கத்திற்குக் கிடைத்த கூட்டுக் கடன் பெறுகைகள் என்பனவற்றின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2017 யூன் நடுப்பகுதியில் ஐ.அ.டொலர் 7.0 பில்லியனுக்கும் மேலாக மேம்பட்டன. அதேவேளை இலங்கை ரூபா 2017இல் யூன் 21 வரை ஐ.அ.டொலருக்கெதிராக 2.3 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

இப்பின்னணியினைக் கவனத்திற் கொண்டு, நாணயச் சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 7.25 சதவீதத்திலும் 8.75 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| நாணயக் கொள்கைத் தீர்மானம் | கொள்கை வீதங்கள் மாற்றப்படவில்லை |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75% |

| | |
|---|---|
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2017 ஓகத்து 3ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்பு:**

## அட்டவணை 01: உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | |
|---|---|---|
| | 2016 | 2017 |
| | வருடாந்தம் | முதலாம் காலாண்டு |
| வேளாண்மை | -4.2 | -3.2 |
| கைத்தொழில்கள் | 6.7 | 6.3 |
| பணிகள் | 4.2 | 3.5 |
| **மொ.உ.உற்பத்தி** | **4.4** | **3.8** |

மூலம்: *தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | திசெ-16 | சன-17 | பெப்-17 | மாச்-17 | ஏப்-17 | மே-17 |
|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 4.5 | 5.5 | 6.8 | 7.3 | 6.9 | 6.0 |
| | தேநுவிசு (2013=100) | 4.2 | 6.5 | 8.2 | 8.6 | 8.4 | 7.1 |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 5.8 | 7.0 | 7.1 | 7.3 | 6.8 | 5.2 |
| | தேநுவிசு (2013=100) | 6.7 | 7.1 | 7.1 | 7.0 | 5.9 | 4.7 |

மூலம்: *தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ. பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திசெ 16 | சன 17 | பெப் 17 | மாச் 17 | ஏப் 17 | திசெ 16 | சன 17 | பெப் 17 | மாச் 17 | ஏப் 17 |
| ஒதுக்குப் பணம் | 856 | 828 | 848 | 892 | 886 | *27.1* | *15.3* | *14.6* | *12.7* | *16.0* |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 5,406 | 5,460 | 5,552 | 5,677 | 5,731 | *18.4* | *17.7* | *18.0* | *20.0* | *20.1* |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (231) | (328) | (370) | (371) | (341) | *22.4* | *9.1* | *7.9* | *15.6* | *26.6* |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 5,637 | 5,788 | 5,922 | 6,049 | 6,072 | *15.9* | *15.8* | *16.0* | *17.0* | *16.0* |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 1,972 | 2,113 | 2,192 | 2,215 | 2,206 | *12.1* | *13.1* | *14.1* | *13.3* | *12.6* |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 495 | 518 | 535 | 553 | 557 | *-5.3* | *-1.8* | *1.6* | *7.5* | *9.0* |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 4,204 | 4,222 | 4,293 | 4,375 | 4,394 | *21.9* | *20.9* | *21.0* | *20.4* | *20.0* |
| விரிந்த பணம் ($M_4$) | 6,630 | 6,711 | 6,811 | 6,951 | 7,033 | *15.9* | *16.1* | *16.4* | *18.2* | *18.4* |

மூலம்: *இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | திசெ 16 முடிவில் | சன 17 முடிவில் | பெப் 17 முடிவில் | மாச் 17 முடிவில் | ஏப் 17 முடிவில் | மே 17 முடிவில் | 22 யூன் 17 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00 | 7.00 | 7.00 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.50 | 8.50 | 8.50 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.42 | 8.38 | 8.49 | 8.75 | 8.72 | 8.72 | 8.75 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 8.72 | 9.03 | 9.32 | 9.63 | 9.73 | 9.61 | 9.60 |
| 182-நாள் | 9.63 | 10.07 | 10.19 | 10.62 | 10.70 | 10.35 | 10.29 |
| 364-நாள் | 10.17 | 10.37 | 10.58 | 10.98 | 11.02 | 10.71 | 10.47 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.52 | 11.49 | 11.70 | 11.79 | 11.78 | 11.40 | 11.88 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.20 | 13.28 | 13.29 | 13.40 | 13.52 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.37 | 14.49 | 14.62 | 14.54 | 15.00 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.17 | 8.42 | 8.66 | 8.81 | 8.89 | 8.99 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 10.46 | 10.84 | 11.15 | 11.38 | 11.43 | 11.52 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.17 | 11.38 | 11.20 | 11.49 | 11.38 | - | - |

மூலம்: *இலங்கை மத்திய வங்கி*